**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT.**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 48/2015 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Ramanathan | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**<u>CHIEF EXAMINATION</u>: 02-12-2019**

நான் இவ்வழக்கில் 2ம் வாதி. எனது தரப்பு முதல் தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விபரங்கள் தெரியும்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை : 02-12-2019</u>**

இந்த வழக்கில் யார் மீது யாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நானும் எனது தாயார் மற்றும் எனது சகோதரி என்பவர் மீது ராஜேஸ்வரி என்பவர் மீது தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் எனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் குலசேகரன்கோட்டையில் நிரந்தரமாக குடியிருந்து வருவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அதேபோல் எனது தாயார் மற்றும் எனது சகோதரி குலசேகரன்கோட்டையில் நிரந்தரமாக வசித்து வருவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எழுதபடிக்க தெரியும். நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் யார் தகவல் சொன்னார் என்றால் நான் தான் தாக்கல் சொன்னேன். இந்த வழக்கில் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் யார் தயார் செய்தது என்றால் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். நான் தாக்கல் செய்த பிராதில் முதல் பரிகாரமாக தாவா சொத்து விபரத்தில் குறிப்பிட்ட சொத்து தொடர்பாக விளம்புகை மற்றும் சுவாதீனத்தை திரும்ப ஒப்படைக்கக்கோரும் பரிகாரம்

கோரியுள்ளேன் என்றால் சரிதான். அதன்படி உத்தேச வரைபடத்தில் EF பகுதியில் குறிப்பிட்டுள்ள 20 அடி நீளம் 1 1/2 அகலம் உள்ள பகுதிக்கு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எந்த வகையில் பூர்வீக பாத்தியப்பட்டது என்ற விபரத்தை பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாத்தாவிற்கு பாத்தியமானது ஆகும். எனது தாத்தாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2வது மனைவி மூலம் எனது தந்தையும் அவருடன் பிறந்த 4 சகோதரிகளும் உள்ளார்கள். முதல் மனைவிக்கு எனது பெரியப்பாவும் 3 சகோதரிகளும் வாரிசுகளாக உள்ளார்கள். தாவா சொத்து எனது தந்தைக்கு அவருடன் பிறந்த சகோதர சகோதரிகளுடன் ஏற்பட்ட பாக பிரிவினையின் படி அவர் பாகத்திற்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். தாவா சொத்திற்கு எனது தந்தை பெயரில் ஏற்பட்ட பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பட்டா என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 எனது தந்தை இறந்த பின்னிட்டு எனது பெயரிலும் எனது தாயார் மற்றும் சகோதரி பெயரிலும் மாறுதல் செய்யப்பட்ட பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ,3 பட்டா மாறுதல் எனது தாயார் மாறுதல் செய்து என்வசம் ஒப்படைத்தார். வா.சா.ஆ,3 பட்டா மாறுதல் செய்வதற்கு முன்பு தாவா சொத்து எனது தந்தை பெயரில் தான் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் எனது தாயார் மற்றும் சகோதரியின் சார்பாகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ,3 பட்டா மாறுதர் எனது தாயார் செய்துள்ளதால் அவரை விசாரணை செய்தால் தான் அதற்கு முன்பு எனது தந்தை பெயரில் பட்டா இருந்தது மற்றும் அது தொடர்பான விபரங்கள் தெரியவரும் என்றால் சரியல்ல. மேற்படி பட்டா மாறுதல் எனது தாயார் 20 வருடங்களுக்கு முன்பு பட்டா மாறுதல் செய்ததாலும், தற்சமயம் எனது தாயார் உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருப்பதால் அவருக்கு அது குறித்து சாட்சியம் அளிக்க இயலாது. எனது தயாருக்கு எவ்வித உடல்நல குறைபாடும் ஏற்படவில்லை என்றும், நல்ல மனநிலை மற்றும் உடல்நிலையில் உள்ளார் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை பெயரில் ஏற்பட்ட பட்டாவை தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணத்தில் உள்ளது என்ற விபரமும் அதற்கு பின்னிட்டு தற்சமயம் எங்களது

பெயரில் வாசா.ஆ.3ன் படி ஏற்பட்ட பட்டாவில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு சொத்து உள்ளது என்ற விபரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது தந்தை பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது. எனது தந்தை பெயரில் உள்ள பட்டாவில் உள்ள சர்வே எண் விஸ்தீரணம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் பட்டா மாறுதல் செய்து என் வசம் ஒப்படைத்தார். எனது தகப்பனார் அவரது வாழ்நாளில் செலுத்திய ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சென்னையில் 30 வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. 25 வருடங்களாக வசித்து வருகிறேன். எனது தாயார் என்னுடன் வசித்து வருகிறார் என்றால் இல்லை. எனது தாயார் சென்னை முகவரியில் வசித்து வரவில்லை. பிராதில் எனது தாயார் சென்னையில் வசித்து வருவதாக முகவரி குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறானது ஆகும். எனது தந்தையுடன் பிறந்தவர் பெயர் சேவு என்றால் சரியல்ல. எனது பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் நத்தம் மனை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த தேதியில் தாவா இடம் கட்டிடம் இருந்து சேதம் அடைந்து காலியிடமாக இருந்தது என்றால் சரிதான். தற்சமயம் அதில் எனது அத்தை வசித்து வருகிறார். தாவ சொத்தின் சர்வே எண்.558/7 என்றால் சரிதான். தாவா சொதிற்குரிய நான்குமால் எனக்கு நன்கு தெரியும்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்.). D. ராம்கணேஷ், எம்.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி